*8*

# எல்லாவற்றிலேயும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 பேதுரு 4:1-11)

*ஒரு இளம் வயதுத் தந்தை ஒருமுறை என்னிடத்தில், "நான் மட்டும் வாழ்வில் ஒரு கருத்துக் கண்ணோக்கைப் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!" என்று கூறினார். இந்த மனிதர் அக்கறை உள்ளவராக இருந்தார். இவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகியோருடன் ஓய்வெடுக்க ஒருக்காலும் நேரம் கொண்டிருந்தவராகக் காணப்படவில்லை. வியாபார வேலைகள் மும்முரமாக இராத வேளையிலும்கூட, அவர் வேலை மும்முரமாக இருக்கக் கட்டாயப் படுத்துவதை உணர்ந்தார். வாழ்வானது அவரது வேலையைச் சுற்றி அதிகம் அதிகமாகவும், அவரது குடும்பத்தைச் சுற்றி குறைவு குறைவாகவும் சுழன்றது. அவர் வாழ்வின் குறைவான முக்கியத்துவம் உள்ள விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் உணர்வைக் கொண்டிருந்தார். எவ்வாறு மாறுவது என்பதை அவர் அறியாதிருந்தார் என்பதே பிரச்சனையாக இருந்தது. அவர் செய்தவற்றை, வடிவமைப்பினால் செய்தார் என்பதற்கு மாறாக கட்டாயப் படுத்துதலினால் செய்தார் என்பதாகக் காணப்பட்டது. அவர் தம்மைப் பற்றிச் சரியாக மதிப்பிட்டிருந்தார் என்பதே அவரது நற்பெயராக இருந்தது. வாழ்வின்மீது அவருக்கு மிகச்சிறந்த கருத்துநோக்கு தேவைப்பட்டிருந்தது.*

*எவரொருவரும் அவர் தமது வாழ்வில் தவறான சில விஷயங்கள் இருப்பதை உணர்ந்தறியாத வரையில் அவர் தமது வாழ்வை மாற்றிக்கொள்ளப்போவதில்லை. நாம் பாவத்தில் பிடிக்கப்பட்டாலோ அல்லது வாழ்வின் மிக முக்கியமான விஷயங்களில் இருந்து பாதை விலகிமாத்திரம் போயிருந்தாலோ, மோசமான வழக்கங்களை முறித்துப் போட நமக்கு ஆதார மூலங்கள் தேவைப்படுகின்றன. இங்கு, பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் ஒருகாலத்தில் தங்கள் வாழ்வில் கொண்டிருந்த, பாவங்களின் பற்றுதலையும் நஷ்டத்தையும் முறித்துப் போட, அவர் எவ்வாறு உதவினார் என்பது தரப்பட்டுள்ளது. அவர், "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார் (4:7). அது வாழ்வில் ஒரு புதிய கருத்துக் கண்ணோக்கை இடுகிறது. கர்த்தர் சீக்கிரம் வருகிறார் என்பதை விசுவாசித்து, புதிய ஏற்பாட்டு சபையார் அவர் வருகையை எதிர்நோக்கியிருந்தனர்.*

## கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள் (4:1-3)

ஆயுதப் போரின் மரணம் மற்றும் துன்பம் ஆகியவற்றைக் கண்டிருக்கும் எவரும் கடும்சோதனையை இலேசானதாக நினைப்பதில்லை. பேதுரு தமது

*வாசகர்கள், ஒழுக்க நற்பண்பு மற்றும் தனிப்பட்ட நேர்மை ஆகியவற்றிற்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வதற்கு, யுத்தகளத்தின் வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தேர்ந்து கொண்ட போது, கிறிஸ்தவப் போராட்டத்தின் தீவிரத் தன்மையை அவர் அடிக்கோடிட்டார். அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ள வேண்டியிருந்தது (4:1). இந்தச் சிந்தனை பிலிப்பியர் 2:5ல் உள்ள பின்வரும் சிந்தனையைப் போன்றதாகவே உள்ளது: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."*

*4:1ல் பேதுருவின் சிந்தனையினுடைய வளர்ச்சியினுடைய வளர்ச்சியானது (1) கிறிஸ்துவின் பாடுகளில் இருந்து (2) அவருடைய சிந்தையைக் கிறிஸ்தவர்கள் ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுதலுக்கு (3) பாடுபடுதல் மற்றும் பாவத்தில் இருந்து வெளியேறுதல் ஆகியவற்றிற்குச் செல்லுகிறது. 1ம் வசனத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது இந்தச் சிந்தனைகளுடன் உள்ள தொடர்பைப் பகுத்தறிதலாக உள்ளது, ஆனால் அது சிறிய வகையிலான எடுத்தாளுதல் அல்ல. முதல் இரு சிந்தனைகள் பின்வருவது போன்று தொடர்புபடுத்தப்படலாம்: பாடுபடுதலைக் கிறிஸ்து கையாண்ட வகைமுறை, அவரது மக்கள் பாடுபட்டாக வேண்டியபோது கொண்டிருக்க வேண்டிய பண்பிற்கு மாதிரியாகி உள்ளது. கிறிஸ்தவர்கள் பாடுபடும்போது, அவர்கள் சகித்திருப்பதற்காக மாத்திரமல்ல, ஆனால் பாடுகளின் மத்தியில் அவர்கள் தங்கள் கருத்து நோக்கைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவருடைய சிந்தையைத் தரித்துக் கொள்ளவேண்டியவர்களாய் இருந்தனர். பேதுரு இந்த நிருபத்தில் வேறொரு பகுதியில் செய்திருப்பது போன்றே, கிறிஸ்துவின் மக்கள் பின்பற்றுவதற்குக் கிறிஸ்துவையே உதாரணமாகச் சுட்டிக் காண்பித்தார்.*

*2ம் வசனத்தின் பின்வரும் பகுதி, மிகவும் கடினமானதாக உள்ளது: "மாம் சத்தில் பாடுபடுகிறவன் ... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்." வசனத்தின் இப்பகுதி குறைந்தபட்சம் இரண்டு விளக்கங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ளது. (1) ஒருவேளை, பாடுபடுதல் என்பது கிறிஸ்தவர்மீது நேர்மறைச் செயல்விளைவைக் கொண்டுள்ளது என்பது இதன் அர்த்தமாக இருக்கலாம். கிறிஸ்துவுக்காகப் பாடுபட்டிருப்பவர், தாம் வேறுவகையில் கொண்டிருக்க இயலாத விஷயமான, பாவத்தை எதிர்த்து நிற்குதல் என்பதில் பலமும் தீர்மானமும் கொண்டிருக்கலாம். ஒருகாலத்தில் இருந்தது போன்று, உலகம் மற்றும் மாம்சம் ஆகியவை இனியும் அவர்மீது பிடிப்புக் கொண்டிருப்பதில்லை என்ற கருத்தில் அவர் பாவத்தை விட்டு ஓய்ந்திருக்கிறார்.*

*(2) "மாம்சத்தில் பாடுபடுதல்" என்ற சொற்றொடர், பழைய பாவ மனிதனின் மரணத்திற்கு அதாவது ஆவிக்குரிய மரணத்திற்கு ஒப்புவமையாக இருத்தல் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அவ்விஷயத்தில் பேதுரு, கிறிஸ்தவர் பாவத்திற்கு மரிப்பதை, அவர் கர்த்தருக்குள் ஆதாய மாக பெறுகிற ஜீவனுடன் நேரெதிராக ஒப்பிட்டார். அடுத்த வசனத்தில் (4:2) அவர் கிறிஸ்தவ வாழ்வை விவரித்தார். மேலும் உடனடி சந்தர்ப்பப் பொருளில் (3:21) பேதுரு, ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார். ரோமர் 6ல் பவுல், ஞானஸ்நானத்தைப் பழைய பாவமனிதனை மரிக்கச் செய்து புதிய ஜீவன் உள்ளவர்களாக உயிர்ப்பிக்கப்படுதல் என்று விவரித்தார். ரோமர் 6:7ம் வசனமானது, நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதியைப் போன்றதாக*

உள்ளது: "மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே." இவ்வசனத்தின் வார்த்தை அமைப்பும் 1 பேதுரு 4:1ன் வார்த்தை அமைப்பும் பல கருத்துக்களில் ஒன்றாக உள்ளன. பவுல் பல ஆண்டுகளுக்கு முன்பு தமது கடிதத்தை ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருந்தார். பேதுரு அதை வாசித்திருக்க சாத்தியமுண்டு. இந்தக் காரணங்களினால், இரண்டாவது விளக்கமானது அதிகம் சரியாக இருக்க வாய்ப்பு உள்ளது.

முந்திய பாவத்தின் வாழ்வானது ஒரு கிறிஸ்தவருக்கு, கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வைக் குறித்த மதித்தலைக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் பழைய பழக்கங்கள் விட்டுவிடக் கடினமானவைகளாக உள்ளன. பேதுரு, தமது வாசகர்கள் இச்சை, மோசம்போக்குதல் மற்றும் களியாட்டு ஆகியவற்றிற்குத் தங்களைப் போதுமான அளவுக்கு ஒப்புக்கொடுத்திருந்தனர் என்று அவர்களுக்கு நினைவூட்டினார் (4:3). அவர்களின் பழைய வாழ்வின் கவர்ச்சிமிக்க தன்மையானது அவர்கள் வேட்டையாடத் தொடர்ந்தது மற்றும் அது அவர்களுக்கு ஒரு பாரமாக இருந்தது. கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வானது பழைய வாழ்விற்கு மரித்தலை வேண்டிக்கேட்டது. அவர்கள் அந்த வாழ்வின் வழியில் சோதனை திரும்ப வர - அல்லது அதனுடன் உடன்பாடு செய்துகொள்ளக்கூட - எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது.

## பயனின்றி வீணாகக் கழியும் வாழ்வை மறுத்தல் (4:4-6)

ஆசியா மைனரின் கிரேக்க நகரங்களில், சமூக மற்றும் சமுதாய வாழ்வானது, விக்கிரகாராதனை மற்றும் மதுபானம் பண்ணுதல் மற்றும் அந்த ஆராதனையுடன் அடிக்கடி இணைவுகொண்டிருந்த காமக்களியாட்டம் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தது. கிறிஸ்தவர்கள் இந்தப் பொதுக் கொண்டாட்டங்கள் மற்றும் களியாட்டுகளில் பங்கேற்க மறுத்ததை, சுய மேன்மையின் உணர்வு என்றும் சமூக உணர்வில் குறைபாடு என்றும் சிலை வழிபாட்டுக்காரர்கள் முடிவுசெய்தனர்.

மத்திய இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் இருந்த பேச்சுக்கலையில் வல்லவரான ஏலியுஸ் அரிஸ்டைட்ஸ் என்பவர், தமது காலத்து உலகத்தின் பாவசிந்தனை கொண்ட தத்துவஞானிகள் மற்றும் புதிய கிறிஸ்தவர்களை விமர்சனம் செய்தார். அவர் பின்வருமாறு கூறினார்,

> அவர்களின் நடக்கை, பலஸ்தீனத்தில் உள்ள தேவதூஷணம் உரைக்கும் மக்களின் நடத்தையைப் போலவே இருக்கிறது. அவர்களும் [அதாவது கிறிஸ்தவர்களும்] கூட, தங்களுக்கு மேல் இருப்பவர்களை உணர்ந்தறியாது இருக்கும் நிலைக்குத் தெளிவான அடையாளங்களினால் தங்கள் [தேச] பக்தியற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றனர், மற்றும் அவர்கள் கிரேக்கர்களிடத்தில் இருந்தும் எந்த ஒரு நல்ல விஷயத்திலிருந்தும் தங்களைப் பிரித்து வைத்துக் கொள்கின்றனர்.[1]

"அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (4:4) என்று அப்போஸ்தலர் கருத்துத் தெரிவித்த அதே காரணத்திற்காகவே,

பேதுருவுக்கு நெருங்கிய சமகாலத்தவரான அரிஸ்டைட்ஸ், மேற்கூறப்பட்ட வார்த்தைகளுடன், கிறிஸ்தவர்கள் மீது குற்றச்சாட்டுகளைக் குவித்தார்.

அரிஸ்டைட்ஸினால் தரப்பட்டது போன்ற வாய்மொழிக் குற்றச்சாட்டு என்பது ஒரு விஷயமாக இருந்தது, ஆனால் வாய்மொழிக் குற்றச்சாட்டுடன் அடிக்கடி, சரீரத்தைத் துன்புறுத்துதலும் இணைந்து இருந்தது. கிறிஸ்தவர்கள் பெரும்பாலும், கிரேக்க நகரங்களில் இருந்த ஏழை மக்கள் மற்றும் எவ்வித உரிமையும் அற்றவர்கள் ஆகியோரிடத்தில் இருந்தே தங்கள் உறுப்பினர்களை பெற்றிருந்தனர். மேல் வர்க்கத்தினர், செல்வம் அல்லது அதிகாரம் இல்லாதவர்களை நிந்திக்கச் சாய்ந்தனர். பேதுரு தமது நிருபத்தை எழுதியபின்பு பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே, வெசூவியஸ் மலையினால் புதையுண்ட பாம்ப்பே நகரின் சுவர் ஒன்றில் யாரோ ஒருவர், "நான் ஏழை மக்களை வெறுக்கிறேன். யாரேனும் ஒருவர் ஒன்றுமில்லாமலேயே சிலவற்றை பெற விரும்பினால், அவர் ஒரு முட்டாளாக இருக்கிறார். அவர் வேண்டியதைச் செலுத்தட்டும் அப்போது அவர் அதைப் பெறுவார்" என்று எழுதியிருந்தார். கிறிஸ்தவர்கள், ஏழைகளாக இருத்தல் என்ற கூடுதலான இழுக்கைக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவர்களைப் பழித்துரைப்பவர்கள் "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" என்று கூறி (4:5) பேதுரு கிறிஸ்தவர்களுக்கு இந்த ஆறுதலை வழங்கினார்.

இவையாவும் இருபத்தியோராவது நூற்றாண்டில் வாழும் கிறிஸ்தவர்களுக்குக் கூறுவது என்ன? உலகத்தின் களியாட்டு மற்றும் மோசம்போகுதல் ஆகியவற்றில் பங்கேற்கும்படி, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் நவீன கிறிஸ்தவர்கள் குறைவாகவே வற்புறுத்தப்படுகிறார்கள் என்பதை நான் சந்தேகப்படுகிறேன். கிறிஸ்தவர்கள், மதுபானத்தை மறுக்கும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் [ஏற்புடையவற்றை மாத்திரம்] தெரிவு செய்யும், தங்கள் இல்லங்களில் மாலைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறை மற்றும் பாலுறவுக் காட்சிகளை அனுமதிக்க மறுக்கும், பொதுச்சூதாட்டம் அல்லது வற்புறுத்தப்படும் கருக்கலைப்பு போன்றவற்றிற்கு எதிராக அரசாங்கத்தை ஆதரித்துக் குரல் கொடுக்கும், தங்கள் கொள்கைகள் போன்றவற்றிற்கு எதிராக, தாங்கள் ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் விஷயங்கள் ஆகியவை வினோதமானதாக எண்ணப்படும் என்பதை அறிந்துள்ள மக்களாக உள்ளனர். அவர்கள் உலகத்துடன் ஒட்டியிருக்கும்படி வற்புறுத்தப்படுவார்கள். எந்தக் காலத்திலும் போன்றே, இருபத்தியோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கும் 4:1-6ல் உள்ள பேதுருவின் புத்திகூறுதல் தேவைப்படுகிறது.

4:6ல் நாம், "இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது" என்று வாசிக்கிறோம். இவ்வசனத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பது 3:19, 20ஐப் பற்றிய நமது விளக்கத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருத்தல் அவசியமாக உள்ளது. அந்த வசனங்கள், கிறிஸ்து தமது வெற்றியை அறிவிக்கப் பாதாளத்திற்கு இறங்கினார் என்று அர்த்தப்படும் என்றால், 4:6ம் வசனமானது, அவர் அங்கு சென்றது, மரித்தோர் "தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக" என்ற விளைவை ஏற்படுத்தியது என்று கூறுவதாகிறது. நாம்

கிறிஸ்துவுக்குப் புறம்பே மரித்து, பாவத்தில் இழந்துபோகப்பட்டு, மரணத்திற்குப் பின்பு மனந்திரும்பி இரட்சிக்கப்பட இன்னொரு வாய்ப்பைப் பெறுவோம் என்று முடிவுசெய்வோமா? இது முடியாது! இவ்வசனத்தை மிக நெருக்க மாகக் கண்ணோக்குதல், வினைசொற்கள் மாறியிருப்பதை வெளிப்படுத்துகிறது. "மரித்தோரானவர்களுக்கு" சுவிசேஷம் "பிரசங்கிக்கப்பட்டது." பேதுரு தமது நிருபத்தை எழுதியபோது அவர்கள் மரித்தவர்களாக இருந்தனர். அவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது அவர்கள் மரித்திருந்தனர் என்று எந்த ஒரு கருத்தும் இவ்வசனத்தில் இல்லை.

4:6ம் வசனம், மனிதர்கள் மரித்த பின்பு மனந்திரும்பி இரட்சிக்கப்படலாம் என்று போதிக்கிறது என்பதாகக் கொண்டால், அது புதிய ஏற்பாட்டின் வேறிடங்களில் உள்ள போதனைக்கு முரண்படுவதாக உள்ளது. எபிரெயர் 9:27, 28ம் வசனப்பகுதி, "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" என்று கூறுகிறது. யோவான் 5:28, 29ல் இயேசு, தமது சத்தத்தைப் பிரேதக்குழிகளில் உள்ளவர்கள் கேட்கும் காலம் வரும் என்று உரைத்தார், அப்போது சிலர் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் மற்றவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்தி ருக்கிறவர்களாகவும் இருப்பார்கள் என்று அவர் கூறினார். அவருடைய வசனங்கள், மரணத்திற்குப் பின்பு மனம் மாறுதல் என்ற எதையும் அனுமதிப்பதில்லை. மற்ற வசனங்களும் (1 தெசலோனிக்கேயர் 4:13-18; ரோமர் 2:3; 14:10; 1 கொரிந்தியர் 4:5; 2 கொரிந்தியர் 5:10; 2 பேதுரு 3:7) இதையே போதிக்கின்றன. மரித்திருந்த மனிதர்களுக்கு (அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக) சுவிசேஷம் போதிக்கப்பட்டது என்று பேதுரு கூறியதாக நாம் முடிவு செய்தாக வேண்டும். இந்த மனிதர்கள் தங்களின் மாம்சப்பிரகாரமான கிரியைகளின்படி கண்டிப்பாக நியாயம் தீர்க்கப்பட்டால், அவர்கள் தங்கள் பாவத்தில் இழந்துபோகப்படுவார்கள், ஆனால் அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்ததால், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் "தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக" என்று பேதுரு கூறினார்.

## எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று புரிந்துகொள்ளுதல் (4:7-11)

கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வருகையை மாத்திரம் எதிர்நோக்கியிருப்ப தில்லை; அவர்கள் அவரது உடனடி வருகையை எதிர்நோக்கி இருக்கின்றனர். இது எப்போதும் இப்படியாகவே இருந்துள்ளது. 1 கொரிந்தியர் நிருபத்தைப் பவுல், "கர்த்தரே, வாரும்" என்று மாத்திரம் அர்த்தப்படுகிற *மாரநா தா* என்ற இரு அரமாயிக்மொழி வார்த்தைகளைக் கொண்டு முடித்தார். வேதாகமத் தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி வார்த்தைகளில் பின்வருபவை உள்ளன: "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:20). பவுல், "இனிவரும் காலம் குறுகினதானபடியால்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 7:29). யாக்கோபு,

*"கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்று கூடுதலாகக் கூறினார் (யாக்கோபு 5:8). தொடக்ககால சபையார் கர்த்தரின் உடனடி வருகையை எதிர்நோக்கியிருந்தபோது, அவர்கள் செய்யும்படி இயேசு அவர்களிடத்தில் கூறியிருந்ததை மாத்திரம் செய்துகொண்டிருந்தனர். அவர், "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித் திருங்கள்" என்று கூறியிருந்தார் (மத்தேயு 24:42).*

*ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துள்ளன, மற்றும் அவரது சபையானது, "இயேசு சீக்கிரம் வருகிறார்" என்று தொடர்ந்து பாடுகிறது. சபை என்பது எப்போதுமே முடிவு காலத்தில் வாழ்கிற என்று அர்த்தப்படும் "பரவசநிலை சமூகமாக" உள்ளது. கர்த்தர் ஒருநாளில் வருவார் என்பது கிறிஸ்தவ வாழ்விற்கு அதன் கருத்து நோக்கத்தையும் இயக்கும் சக்தியையும் தருகிற கற்பனைக்கருத்தாக இருப்பதில்லை. அது பின்வருவதாக உள்ளது: "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" (4:7). கட்டளைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசரமானது அந்த உய்த்துணருதலில் இருந்து தனது வல்லமை யைத் தரவழைக்கிறது.*

### ஆரோக்கியமான முடிவெடுப்பவர்களாக இருங்கள்

*அசுத்த ஆவி பிடித்திருந்த மனிதனை இயேசு குணமாக்கிய பின்பு, அந்த நகரின் மக்கள் நடந்திருந்தது என்ன என்பதைக் காணும்படி வந்தனர் என்று மாற்கு பதிவுசெய்தார். அவர்கள் வந்தபோது, அசுத்த ஆவிகளின் படையைக் கொண்டிருந்த அம்மனிதன் "வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக்" கண்டனர் (மாற்கு 5:15). "புத்தி தெளிந்திருக்கிறதை" என்று மொழிபெயர்க்கபட்டுள்ள வார்த்தையானது, 4:7ல் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து" அல்லது "தெளிவான சிந்தை உடையவர்களாயிருந்து" (NIV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களை, அவர்களின் சரியான சிந்தைகளில், கருத்துணர்வு, நிதானம் நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.*

*எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று நாம் உணர்ந்தறியும்போது, நாம் "ஆரோக்கியமான முடிவும் தெளிந்த ஆவியும்" உடைவர்களாக இருக்கச் சாத்தி யக்கூறு உள்ளது. இவ்வார்த்தைகள், கிறிஸ்தவர் என்ற வகையில் வாழ்க்கையை முனைப்புடன், பகுத்தறிவுடன் அணுகுதல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. வில்லியம் ஜேம்ஸ் என்பவர், மத அனுபவத்தின் பல்வேறு வகைகள் என்ற தமது மாபெரும் நூலில், தேவபக்தியாயிருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்று ஆராய்ந்தார். பல கூறுகளைத் தனிப்படுத்திப் பரிசோதித்த பின்பு அவர், தேவபக்தியின் இன்றியமையாத பண்பு என்பது அது தன்னைத் தானே மும்முர மானதாக எடுத்துக்கொள்கிறது என்று அவர் கூறினார். கிறிஸ்தவம் என்பது ஒரு கவலையான மார்க்கம் அல்ல, ஆனால் அது தமது செய்தியை, அதன் எதிர் பார்ப்புகளை, அதன் நம்பிக்கைகளை மற்றும் அதன் பயங்களை மும்முர மாக எடுத்துக் கொள்கிறது. இப்படிப்பட்ட ஒரு கருத்து நிலைப்பாடு இதை இயல்பாகவே, ஜெபத்திற்குத் தரவழைக்கிறது, ஏனெனில் ஜெபம் என்பது தேவபக்தியின் முக்கிய சாராம்சமாக உள்ளது.*

**ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்**

*அன்பு விளக்கத்தை எதிர்த்து நிற்கிறது. அது இன்னொருவரின் நலத்தை நாட உறுதிப்பாடு கொண்டுள்ள நபரின் உணர்வுப் பூர்வமான பிணைப்பை உள்ளடக்குகிறது, மற்றும் அது சுயத்தைத் தியாகம் செய்யும் ஆவியின் பெருந்தன்மையை உள்ளடக்குகிறது. இதைக் காட்டிலும் அதிகமாகக் கூறுதல் கடினமானதாக உள்ளது. ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகள் அனுபவித்த இடர்ப்பாடு மற்றும் துன்புறுத்தப்படுதலின்போது, அன்பானது வேறு எந்த வேளையைக் காட்டிலும் அதிகமாகக் கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறரையும் கர்த்தரையும் அதிகமாய்ப் பிணைத்தது. சிறு எரிச்சல்களும் மனித ரீதியான வினோதங்களும் சரீரத்தின் சபையின் ஒருமைப்பாட்டைப் பரீட்சித்தபோது, "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று பேதுரு கூறினார் (4:8).*

**உபசரிப்புத் தன்மை உடையவர்களாக இருங்கள்**

*இல்லத்தின் முழு உபசரிப்பையும் மற்றும் உடைமைகளையும், அந்நியர்களுக்கு அல்லது விருந்தினர்களுக்கு அளித்தல் என்பது நினைவுக்கு அப்பாற்பட்ட காலத்தில் இருந்தே, அண்மைக் கிழக்கு நாடுகளில் ஏறக்குறை ஒரு புனித நடைமுறையாக இருந்துள்ளது. ஆதியாகமம் 18:1-8ல் ஆபிரகாமின் கூடாரத்தின் கதவருகில் இரண்டு அந்நியர்கள் வந்த நிகழ்ச்சியானது இந்த பழக்கத்தை நன்கு விவரிக்கிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபிரெயர் 13:2). என்று எழுதியபோது இந்த நிகழ்ச்சியையே குறிப்பிட்டார் என்பது உறுதி.*

*ஊழியத்தின் நிமித்தம் பயணம் செய்யும் போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் தொடக்ககால சபையில் இருந்தனர் என்பது 4:9ல் பேதுருவினால் தரப்பட்ட இந்தப் புத்திமதிக்குப் பின்னணியாக இருந்திருக்கலாம். பயணம் செய்யும் போதகர்களிடத்தில் உபசரிப்புத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்ற கிறிஸ்தவப் பொறுப்பானது, யோவானுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலத்தில் இருந்தே சபையில் ஒரு முக்கிய விஷயமாகி இருந்தது. உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றி இருந்ததாக யோவான் எச்சரிக்கை செய் திருந்தார் (1 யோவான் 4:1). யோவான் எழுதிய இரண்டாம் மற்றும் மூன்றாம் நிருபங்கள், பயணம் செய்யும் இந்தத் தீர்க்கதரிசிகளுக்குக் கிறிஸ்தவர்கள் எப்போது உபசரிப்பு அளிக்க வேண்டும் மற்றும் எப்போது உபசரிப்பு அளிக்கக் கூடாது என்பது பற்றி, அவர்கள் [கிறிஸ்தவர்கள்] பகுதியில் இருந்த சில குழப்பங்களைப் பிரதிபலிக்கின்றன.*

**தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள வரத்தைப் பயன்படுத்துங்கள்**

*பேதுரு, கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய இரண்டு வரங்களை (அதாவது, போதித்தல் மற்றும் உதவிசெய்தல் என்பவற்றை) மாத்திரம் விவரித்து உரைத்திருப்பினும், இன்னும் பல வரங்கள் உள்ளன என்பதை அவர் உணர்ந்து அறிந்திருந்தார் என்பது பற்றிச் சந்தேகம் எதுவும் இல்லை. கிறிஸ்தவர்களின் தாலந்துகள் வேறுபடுகின்றன என்பது புதிய ஏற்பாட்டிலேயே விட்டுவிடமுடியாத போதனைகளில் ஒன்றாக இருக்கிறது, ஆனால் நமது*

தாலந்து எதுவாக இருந்தாலும் அதைக் கர்த்தருக்கென்று இலவசமாய்க் கொடுக்க வேண்டியது நமது பொறுப்பாகும். இவ்வசனப் பகுதிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவற்றைப் பற்றிய சுருக்கமான ஆய்வில் இருந்து நாம் பயனடைய முடியும்.

லூக்கா 12:48ல் இயேசுவின் எச்சரிக்கை நமது கவனத்தை ஈர்க்கிறது: "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்." லூக்கா சுவிசேஷத்தில் ராத்தல்களின் உவமை (லூக்கா 19:11-27) இந்த எச்சரிக்கையைப் பின்பற்றுகிறது; மத்தேயு சுவிசேஷத்தில் நாம் தாலந்துகளின் உவமையைக் காணுகிறோம் (மத்தேயு 25:14-30). இந்த உவமைகளின் விபரங்கள் வேறுபட்டு இருந்தாலும், செய்தியானது ஒன்றாகவே உள்ளது: தேவன் நமக்குத் தந்துள்ள தாலந்துகளை, எஜமானருக்கான ஊழியத்தில் பயன்படுத்தத் தவறுதல் என்பது தேவனுடனான நமது உறவை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குகிறது.

ரோமர் 12:6ல் பவுல், "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே" என்று எழுதினார். பின்பு அவர் தமது வாசகர்கள் கொண்டிருந்து இருக்கக் கூடிய வரங்களின் சில வகைகளையும், அவற்றைப் பயன்படுத்துதலில் அவர்களின் பொறுப்புகளையும் பட்டியலிட்டார். 1 கொரிந்தியர் 12:4ல் அவர், "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே" என்று கூறினார். 12:7ல் அவர் "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது" என்று கூடுதலாகக் கூறினார்.

4;10, 11ல் பேதுரு தமது வாசகர்களுக்கான அறிவுறுத்துதலில், தேவன் கொடுத்துள்ள தாலந்துகளைப் பயன்படுத்துதலில் கிறிஸ்தவப் பொறுப்பின் அதே பாடங்களைப் போதித்தார். இந்தத் தாலந்துகள் எல்லாவற்றின் தொகுப்பாகக் கருதப்படக்கூடிய இரண்டு வரங்களின்மீது பேதுரு கவனம் குவித்தார் என்பதே அவரது அறிவுறுத்துலில் காணப்படும் வேறுபாடாக உள்ளது: போதித்தல் மற்றும் உதவிசெய்தல். போதிக்கும் வரம் கொண்டிருந்த கிறிஸ்தவரின் பொறுப்பினுடைய தீவிரத் தன்மை பற்றிப் பேதுரு வலியுறுத்தினார்: "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (4:11). KJV வேதாகமத்தில் "Let him speak as the oracles of God" என்றுள்ளது மற்றும் NIV வேதாகமத்தில் "He should do it as one speaking the very words of God" என்றுள்ளது. தேவன் வெளிப்படுத்தியுள்ளதைத் தவிர வேறு எந்தச் செய்தியையா வது சார்ந்திருக்கும் பிரசங்கியார் அல்லது போதகர், அப்போஸ்தலரின் இந்த அறிவுறுத்துதலைப் புறக்கணிக்கிறார்.

எல்லாக் கிறிஸ்தவர்களும், போதிப்பதற்கோ அல்லது மக்கள் முன்பாக எடுத்துரைப்பதற்கோ திறன் கொண்டிருப்பதில்லை, ஆனால் ஒவ்வொருவரும், தேவனுடைய ஊழியத்திலும் அவரது மக்களுக்கான சேவையிலும் பயன்படுத்தக் கூடிய தாலந்துகள் சிலவற்றைக் கொண்டுள்ளனர். பேதுரு, "ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்" என்று கூறினார் (4:11). "உதவி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "உதவிக்காரரர்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினை வடிவமாக உள்ளது, ஆனால் பேதுரு, உதவிக்காரர்களின் பொறுப்புடன் தமது குறிப்புரைகளை மட்டுப்படுத்தி விடவில்லை. உதவிசெய்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்தில் பெரியவனாகுதலை அடைதலாக உள்ளது (மத்தேயு 20:25, 26). நாம் தேவனைப்

பிரியப்படுத்த வேண்டும் என்றால், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பற்றிப் பிறரிடம் தற்காப்பை ஏற்படுத்த, நாம் கொண்டிருக்கும் எந்தத் தாலந்துகளையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

## முடிவுரை

1 பேதுரு நிருபத்தில் மேலாதிக்கம் செலுத்தும் இரண்டு ஆய்வுக்கருத்துகள் - கிறிஸ்தவர்கள் துன்புறுதல் மற்றும் கர்த்தரின் மறுவருகை - ஆகியவை 4:1-11ன் செய்திக்கு அடிப்படையாக உள்ளன. கிறிஸ்துவின் பாடுகளை மறைமுகமாய்க் குறிப்பிட்டிருந்த பேதுரு, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் மேலாதிக்கம் செலுத்தியிருந்த பழைய பாவங்களுக்கு மரிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். தேவனுடைய மக்கள் பேதுரு கூறுவதைக் கவனிப்பார்கள் என்றால், அவர்கள் பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கான புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்துடன், எதிர்ப்பிற்கும் துன்புறுத்தப்படுதலுக்கும் பதில் அளிப்பார்கள்.

பேதுருவும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும், கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று விசுவாசித்திருந்ததால், அப்போஸ்தலரின் புத்திமதிகளுக்கு அவசரத் தேவை ஒன்றிருந்தது. அவர்கள் சிறிது காலமே கொண்டிருந்தனர். செய்ய வேண்டியது எதுவோ, அது விரைவில் செய்யப்பட வேண்டியிருந்தது. இரட்சிக்கப்பட வேண்டியவர்கள் போதிக்கப்பட வேண்டியிருந்தனர். அவர்கள் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டியிருந்தனர். அவர்களின் வாழ்வில் கிறிஸ்து கொண்டு வந்திருந்த மாபெரும் சந்தோஷத்தை அவர்களுக்குப் பேதுரு, 1:6ல் நினைவுபடுத்தினார், ஆனால் பின்பு அவர், "என்றாலும், ... இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" என்று கூடுதலாகக் கூறினார். துன்புறுதல் என்பது கொஞ்சக் காலம் மாத்திரமே இருந்தது. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. கர்த்தருடைய மறுவருகை சமீபமாக உள்ளது என்பதே அன்றும் இன்றும் உள்ள சபைக்கு விடையாக உள்ளது. நாம் கடைசி காலத்தில் வாழ்கிறோம். அந்த உணர்ந்தறிதலானது கிறிஸ்தவருக்கு, அவர் உரிமை கொண்டுள்ளவை மீது, அவர் கற்றறிந்துள்ளவை மீது மற்றும் இந்த வாழ்வில் அவர் என்ன செய்கிறார் என்பதன்மீது, தகுதியான கருத்து நோக்கைத் தருகிறது. "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்."

---

குறிப்பு

[1]Aelius Aristides *Orations* 46.